<u>**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்**</u>
<u>**மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்**</u>

<u>MCOP No. 89/2023</u> 25-02-2026 **ம.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஜீவா | தொழில் |
| த/பெ | மணி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்ட முதல் விசாரணை தொடர்ச்சி**</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர். பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். தாராபுரம் காவல் நிலைய குற்ற எண். 45/2023 முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.1, மாதிரிவரைபடம் உண்மை நகல் ம.சா.ஆ.2, பார்வை மகஜர் உண்மை நகல் 3, TN 66 A 7953, WB 23 E 5285 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் உண்மை நகல் ம.சா.ஆ.4, குற்ற இறுதியறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.5, மருத்துவவிடுப்பு சான்று புகைப்பட நகல் ம.சா.ஆ.6, மணி என்பவரது இறப்பு சான்று ம.சா.ஆ.7, சடலக்கூறாய்பு அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.8, மணி என்பவரது வாரிசு சான்று ம.சா.ஆ.9, மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.10 (4 வரிசை) மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.11 (4 வரிசை),1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.12, மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தபோது என்னுடைய தகப்பனார் பின்னால் வரும் லாரியை சரிவர கவனிக்காமல் வலது புறமாக வாகனத்தை திருப்பி விபத்தை ஏற்படுத்திக்

கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய தகப்பனார் தலைக்கவசம் அணிந்து இருந்தால் தலைக்காயத்தையும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்பையும் தடுத்து இருக்கலாம் என்று சொன்னால் என்னுடைய தகப்பனார் விபத்தின் போது தலைக்கவசம் அணிந்து இருந்தார். என்னுடைய தகப்பனார் தலைக்கவசம் அணிந்து இருந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது என்னுடைய தகப்பனாரின் வயது 49 என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் என்ன தொழில் செய்து எவ்வளவு வருமானம் ஈட்டி வந்தார் என்பதை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் வருமானத்தை நான் மிகைப்படுத்தி காட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:— இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.25 18:48:25 +0530

3—ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**<u>கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**

**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம்,  தாராபுரம்</u>**

**<u>MCOP No. 89/2023</u>** 25-02-2026 **ம.சா.2**

சாட்சியின் சாட்சியம்  திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M.,  கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சூர்யா | தொழில் |
| த/பெ | மாரியப்பன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன்.  நான் இந்த வழக்கில்  மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சிமளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் எனக்கு மாமா முறை வேண்டும் என்று சொன்னால் சரிதான்.  விபத்து தொடர்பாக நான் நேரடியாக புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.  நான் விபத்தை நேரடியாக பார்த்திருந்தால் அது குறித்து புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் பார்க்காததால் தான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய மாமாவின் அஜாக்கிரதையால்  நடந்தது என்றாலும் அவர்தான் பின்னால் வரும் லாரியை கவனிக்காமல் வலது புறம் வாகனத்தை திருப்பி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.  விபத்து சமயத்தில் என்னுடைய மாமா தலைக்கவசம் அணிந்து இருந்தால் தலைக்காயத்தையும்  அதனால் ஏற்பட்ட உயிரிழப்பையும் தடுத்து இருக்கலாம் என்று சொன்னால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார்.  விபத்தின் போது அவர் தலைக்கவசம் அணிந்து இருந்தால் அது குறித்து உரிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் அவர்

தலைக்கவசம் அணிந்து இருந்ததாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்காமல் மனுதாரருக்கு ஆதரவாக பார்த்ததாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.25 18:48:31 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.